**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No,53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**STC.No. 814/2023**

PW-3

| | | | |
|---|---|---|---|
| Name | சின்னராஜ்(PW3) | | |
| Father's Name | கருப்புசாமி | தொழில் | |
| Village | பழங்கரை | | |
| Taluk | அவிநாசி | Age | 50 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 31st **day of August 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு ஆட்டோ ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். கடந்த 04.08.2017 தேதி பகல் 08.30-09.00 அளவில் அவிநாசி புதிய பேருந்து நிலையம் ஆட்டோ ஸ்டாண்டில் நான் இருந்தபோது திருப்பூரில் இருந்து கோவை நோக்கி ஸ்கூட்டியில் ஒரு பெண் வந்தார். அவருக்கு பின்னால் அதே திசையில் வந்த அரசு பேருந்து பேருந்து நிலையத்திற்குள் திரும்பும் போது அந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி விட்டது. அந்த பெண்ணுக்கு உடல் முழுவதும் லேசான காயங்கள் ஏற்பட்டு இருந்தன. அக்கம் பக்கத்தினர் ஆம்புலன்ஸ் மூலம் அந்த பெண்ணை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். சம்பவத்தின் போது அரசு பேருந்தை ஓட்டி வந்த ஓட்டுநரை நான் பார்த்தேன். அவரை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். அந்த நபர் ஆஜர் எதிரி தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவம் நடந்த பகுதி போக்குவரத்து நிறைந்த பகுதி என்றால் சரிதான். பேருந்து பேருந்து நிலையத்திற்குள் செல்ல வேண்டும் என்றால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்றால்தான் செல்ல முடியும் என்றால் சரிதான். உள்ளே செல்வதற்காக பேருந்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தது என்றால் சரிதான். கிழமேல் ரோட்டில் விபத்து எதுவும் நடைபெறவில்லை என்றால் சரிதான். பேருந்துக்குள் எத்தனை நபர்கள் பயணித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த பேருந்து

நடத்தினர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பேருந்துக்கும் இருசக்கர வாகனத்திற்கும் என்ன டேமேஜ் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் அந்த பெண்ணை சுற்றி கூட்டமாக இருந்ததால் அந்த கூட்டத்தை விலக்கி பார்த்த பின்பு தான் நான் விபத்தை பற்றி தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் எத்தனை நபர்கள் பயணித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு அருகில் புற நகர காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் போலீசார் இருந்தார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு போலீசார் உடனடியாக வந்தார்கள். ஆம்புலன்ஸ் வாகனத்தின் எண் எனக்கு தெரியாது.நான் சம்பவ இடம் சென்று பார்த்த போது போலீசார் விசாரித்துக் கொண்டு இருந்தார்கள் என்றால் சரிதான். நான் சொன்ன முறையிலும் விதத்திலும் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும் இரு சக்கர வாகனத்தில் வந்த நபர் தான் பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள ஆட்டோவை கவனித்துக் கொண்டு பேருந்தின் மீது மோதி இந்த விபத்து ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| <br><br><br><br>**சாட்சியின் கையொப்பம்** | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |